**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 23.06.2025**
**OS. No.27/2015 & OS.No.122/2015**
**வழக்கு சாட்சி DW.1–இந்திராணி , க/பெ.கோவிந்தராஜ்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

என் மாமனார் சண்முகம் எழுதி வைத்த உயிலானது ச.எண்.356/5 மட்டும் தான் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான், எனக்கு தெரியாமல் அந்த உயில் எழுதியுள்ளார்கள். பெரிய கவுண்டர் எனக்கு கொழுந்தனார் ஆவார். அவரிடம் நான் பேசியுள்ளேனா என்றால் இல்லை. பெரிய கவுண்டருக்கு மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான். அவருக்கு மருத்துவம் பார்க்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பெரிய கவுண்டர் அவ்வப்போது மனநலம் பாதிக்கப்படுவார், அவ்வப்போது நல்ல நிலையில் சரியாகிவிடுவார் என்றால் எனக்கு தெரியாது, வாதிகளுக்கு தான் தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் பாலகிருஷ்ணன் அவர்களுடன் எனக்கு திருமணம் ஆகவில்லை என்றும், ஆனால் அவர் மூலம் எனக்கு ஒரு பெண் பிள்ளை உள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் என் நிரூபண வாக்குமூலத்தில் 6 வது பக்கத்தில் பத்தி 17 ல் மேற்படி என் கணவர் இறந்த பிறகு நான் 2 வது திருமணம் செய்து கொண்டேன் என்பது சுத்த பொய் என்றும், கட்டுக்கதை என்றும், எனக்கு பெண் பிள்ளை உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த நிரூபண வாக்குமூலத்தில் அவ்வாறு இருந்திருந்தால் அது தவறானது என்றால் சரிதான். பெரிய கவுண்டர் இறந்ததற்கு நான் தாக்கல் செய்த அ.வ.எண்.122/2015 திருத்தப்பட்டபோது விளம்புகை பரிகாரம் கோராததால் நான் தாக்கல் செய்த மேற்படி வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் மூன்று வீடுகள் உள்ளது என்றால் சரிதான், வாதிகள் பக்கம் இரண்டு வீடுகள் உள்ளது, என் பக்கம் ஒரு வீடு உள்ளது. என் மாமனார் சண்முகத்திற்கு தனிப்பட்டு பாத்தியப்பட்ட சொத்து என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், அது என் கணவரின் பூர்வீக சொத்து ஆகும். மேற்கண்ட சொத்து பூர்வீக

சொத்து என்பதற்கு ஆவணம் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மாமனார் சண்முகத்தின் பங்காளிகளை நான் தாக்கல் செய்த அ.வ.எண்.122/2015 ல் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. சண்முகமும் அவரது பங்காளிகளும் தங்களுக்குள் சொத்தை பிரித்து கொண்டதால் தாவா சொத்து சண்முகத்திற்கு ஒதுக்கப்பட்டதால், அது அவருக்கு தனிப்பட்டு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து சண்முகத்தின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் அவரது பங்காளிகளை நான் தாக்கல் செய்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ன் மூலம் சண்முகம் வைத்த அடமானத்தை அவரது மகன்களான சந்திரசேகரன் மற்றும் குணசேகரன் அதற்குண்டான தொகையை கொடுத்து மீட்டுவிட்டார்கள் என்றால் சரியல்ல, நான் தான் தொகை செலுத்தி மீட்டுள்ளேன். நான் தான் மீட்டுள்ளேன் என்பதற்கு ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை, பத்திரம் மட்டும் தான் திருப்பி கொடுத்தார்கள். அந்த அடமான பத்திரமே தவறானது என்றும், முத்திரைத்தாள் மற்றும் பதிவு சட்டத்தின்படி அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. அடமான பத்திரத்தை முறையாக பதிவு செய்யாததால் பதிவு சட்டத்தின்படி குறியீடு செய்ய இயலாது என்றும், அதை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாது என்றால் சரியல்ல. அந்த அடமான பத்திரத்தில் 1 ஏக்கர் நிலம் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள என் பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் 1 ஏக்கர் நிலம் எனக்கு ஒதுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படும் 1 ஏக்கர் நிலத்தின் ச.எண்.356/7A ஆகும். இந்த வழக்கு தாக்கல் செய்தபோது மேற்கண்ட ச.எண்.356/7A என்பது பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உட்பிரிவுகளில் இரண்டு உட்பிரிவுகள் எனக்கு பாத்தியப்பட்டதாக குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவுகள் குறித்து என் நிரூபண வாக்குமூலத்திலும், வழக்கிலும் குறிப்பாக சொல்லவில்லை என்றும், திருத்தம் செய்யும் போது பிராதிலும் குறிப்பிட்டு திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான், அந்த இரண்டு சொத்திற்கும் அதே எண் தான் ஆகும். என் நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் எண்.8, பத்தி எண்.23 ல் கடைசி மூன்று வரிகளில்

ச.எண்,356/7A, 1 ஏக்கர் நிலத்தை நாங்கள் விவசாயம் செய்து, அதிலுள்ள வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றும், நீதிமன்ற ஆணையரும் இது குறித்து கூறியுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையருக்கு சொத்தில் யார் உள்ளார் என்று சொல்ல அதிகாரம் இல்லை என்றும், நீதிமன்ற ஆணையர் அதற்காக பணிக்கப்படவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு வாதிகள் ஆட்சேபனை தெரிவித்து குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் நான் தெரிந்து கொண்டேன். தாவா சொத்திற்கு ஈடாக என் கணவருக்கு என் மாமனார் சண்முகம் இடத்திற்கு ஈடான தொகையை பலமுறை கொடுத்து உதவியுள்ளார் என்றும், அதனால் தான் உயிலில் என் கணவருக்கு சொத்து ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல, என் கணவருக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை. சொத்து கேட்டு என் மாமனார் சண்முகத்தை மிரட்டியதால் தான் மேச்சேரியில் பதிவு செய்யாமல் ஓமலூரில் உயிலை பதிவு செய்தார்கள் என்றால் நான் அவ்வாறு எதுவும் மிரட்டவில்லை. 4ம் வாதி சந்திரசேகரன் சண்முகத்திற்கு வாரிசு சான்றிதழ் கோரி மனு செய்தாரா என்றால் செய்தார், நாங்களும் வாரிசுகள் உள்ளோம் என்று சொல்லி அவருக்கு மட்டும் வாரிசு சான்றிதழ் கொடுக்க ஆட்சேபித்தோம். வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலர் விசாரணைக்கு வந்தாரா என்றால் வந்தார். அந்த விசாரணைக்கு வந்தபோது எனக்கு இரண்டாவது திருமணம் ஆகி பெண் பிள்ளை உள்ளது தெரியவந்ததால் சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் செய்து அதை அறிக்கையாக வட்டாட்சியரிடம் சமர்பித்துள்ளார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் என் பெயரை நீக்கிவிட்டு, 2ம் பிரதிவாதி அருள் மற்றும் 3ம் பிரதிவாதி கவிதா ஆகிய இருவர் பெயரை மட்டும் சேர்த்து வாரிசு சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் வாரிசு சான்றிதழ் தான் மேற்படி வாரிசு சான்றிதழ் என்றால் சரியல்ல. நான் இரண்டாவது திருமணம் செய்துகொண்டேன் என்றும், அதனால் தான் நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. வாரிசு சான்றிதழ் கொடுத்து 7 நாட்களில் ஆட்சேபனை செய்யவேண்டும் என்றும், நான் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதால் தான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல, வாரிசு சான்றிதழ் கொடுத்த விவரம் எனக்கு தெரியாததால் ஆட்சேபனை செய்யவில்லை. என்

மாமனார் சண்முகத்தின் இரண்டு மனைவிகளுக்கும் என்ன உறவு என்றால் எந்த உறவும் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், அவர்கள் இருவரும் சித்தப்பா, பெரியப்பா பிள்ளைகள் என்றால் சரியல்ல. 13.12.2021ம் தேதியில் என் மகள் நித்யஸ்ரீக்கு மஞ்சள் நீராட்டு விழா நடத்தினேன் என்றால், எனக்கு அவ்வாறு மகளே இல்லை, நான் எந்த விழாவும் நடத்தவில்லை. அந்த மஞ்சள் நீராட்டு விழா மோகசுந்தரம் திருமண மண்டபத்தில் நடந்தது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் யார் என்றால் அது நான் இல்லை. மேற்கண்ட திருமண மண்டபத்தில் மஞ்சள் நீராட்டு விழாவின் போது பாலகிருஷ்ணனின் புதல்வி என்று என் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர்கள் என் மகன் மற்றும் மருமகள் ஆகும், அதை வாதிகள் தரப்பில் ஜோடித்துள்ளார்கள். அதே புகைப்படத்தில் உள்ள மற்றொரு நபர் என்னுடைய மகள் மற்றும் மருமகன் ஆகும், அதுவும் வாதிகள் தரப்பில் ஜோடிக்கப்பட்டுள்ளது. என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் மூன்று நபர்கள் ஆவர். அவர்கள் பெயர்கள் மாரியப்பன், கோபால், அர்த்தனாரி ஆகும். என் மகள் தான் நித்யஸ்ரீ என்றும், அவருக்கு மஞ்சள் நீராட்டு விழா ஊர் முழுவதும் போஸ்டர் அடித்து கொண்டாடினோம் என்றும், வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுத, படிக்க தெரியும் என்றும், வேண்டுமென்றே நீதிமன்றத்தின் பார்வையிலிருந்து தப்பிக்க தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றும், வாதிகள் தாக்கல் செய்த வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.